621

சிவ ராமஜெயம்

மாஸ்டர் S. G. கிட்டப்பா,
சங்கீதசரபஜனுப் K. P. மொய்தீன் சாஹிப்
T. S. வேலுநாயர், மதுரைபாய்ஸ் தத்வமீனலோசனி
வித்வபால சபா முதலிய டிராமா கம்பெனியார்
பலராலும் நடாத்திவருகிற,

மார்க்கண்டேயர் சரித்திரம்

டிராமா (முதற்பாகம்)

1624
19 DEC 1924
MAS

N. S. வெங்கடேஸ்வர ஐயரால்
இயற்றப்பெற்றது.

பெ ஆறுமுக முதலியாரால்,
...ன, முரஹரி அச்சுக்கூடத்திற்
...திப்பிக்கப்பட்டது.

1924. [அணா—5.
...ஜிஸ்டர் காப்பிரைட்.

85558

ஸ்ரீராமஜெயம்

நூதன புத்தகங்கள்.

———— :o: ————

ஜெயங்கொண்ட சோழபுரம் வா. கருஷணசாமிக்கோனூர் இயற்றிய

ஸ்ரீமகாபாரதம், ஆதிபர்வம், சபாபர்வமடங்கிய முதற்பாகம் திருப்புகழ்காவடிச்சிந்து வர்ணமெட்டு 40-சயிட்டுள்ளது	0	4	0
ஸ்ரீமத்ராமாயணம் பாதுகா பட்டாபிஷேகம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு 40-சயிட்டுள்ள புஸ்தகம்	0	4	0
ஸ்ரீமகாபாரதம் திரௌபதை வஸ்திராபஹரணம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
இராமாயணத்திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
குசேலசகரிஎன்னும் நல்லதங்காள் சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு முதற்பாகம்	0	2	0
ஷை நல்லதங்காள் சரித்திரம் இரண்டாம்பாகம்	0	2	0
அல்லி அர்ஜுனன் திருப்புகழ் காவடிச்சிந்து முதற்பாகம்	0	2	0
ஷை இரண்டாம்பாகம்	0	2	0
கோவலன்சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
ஷை இரண்டாம்பாகம்	0	2	0
வல்லாளமகாராஜன் திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0

திருசிரபுரம் கோவிந்ததாஸ் அவர்களியற்றிய

ஸ்ரீராமாயண பக்திரஸக்கீர்த்தனங்கள் நூதன இந்துஸ்தான் பாரீஸ், தில்லானு டோமரி அடங்கியது	0	2	0

கும்பகோணம் புள்தகஷாப் கே வி. கதிர்வேல் பிள்ளை இயற்றிய

தேசிங்குராஜன்கதை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	3	0
கந்தனுர்சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
சாவித்திரி சத்தியவான் திருப்புகழ் காவடிச்சிந்து 1-ம்பாகம்	0	2	0
ஷை இரண்டாம்பாகம்	0	2	0
மயில்ராவண சரித்திரத் திருப்புகழ் காவடிச்சிந்து	0	3	0
வள்ளியம்மை திருக்கல்யாண திருப்புகழ் காவடிச்சிந்து	0	2	0
மனமோகனமன்மதன சரித்திரம்	0	4	0
பவழக்கொடி திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
இட்லி குடும்ப உப்புமாவுக்கும் சண்டை	0	1	0
ராமநாமபஜனைகீர்த்தனை திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெ	0	3	0
மாம்பழக்கும்மி	0	1	0
பிரகலாதசரித்திர டிராமா	0	5	0
ஸ்ரீசௌளராஜப்பெருமாள்பேரில் பக்திரஸ அருள்வாக்குபத	0	4	0
ஸ்ரீகண்ணபிரான் பஜனைகீர்த்தனை	0	2	0
மெஹருஹமான மன்மதன் சரித்திரம் டிராமா	0	4	0

உ

ஸ்ரீராமஜெயம்.

மாஸ்டர் S. G. கிட்டப்பா,
சங்கீதசரபஜனப் K. P. மொய்தீன் சாஹிப்,
P. S. வேலு நாயர், மதுரைபாய்ஸ் தத்வமீனலோசனி
வித்வபால சபா முதலிய டிராமா கம்பெனியார் பலராலும்
நடாத்திவருகிற.

மார்க்கண்டேயர் சரித்திரம்.

டிராமா (முதற்பாகம்.)

இவை.
மன்னார்குடியில் வசிக்கும் நெல்லேப்பிள்ளி,
பிர்ம்மஸ்ரீ N. R. சுந்தரேஸ்வர ஐயர்
அவர்கள் குமாரன்,
N. S. வெங்கடேஸ்வர ஐயரால்
இயற்றப்பெற்றது.

பெ. ஆறுமுக முதலியாரால்,
சென்னை,
முரஹரி அச்சுக்கூடத்திற்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காபிரைட்.

இதன் விலை] 1924 [அணா—6

162

0-1892 MU23,M
N24

85558

3

SREE AUTHILETCHUMI VILASAM BOOK DEPOT

உ

ஸ்ரீராமஜெயம்.

ரிஜிஸ்டர் அறிவிப்பு.

இதனால் சகலமானவர்களுக்கும் தெரிவிப்பது யாதெனில்:— மார்க்கண்டேயர் சரித்திரம் டிராமா புத்தகத்தை மன்னார்குடி பிரம்மஸ்ரீ N. S. வெங்கடேஸ்வர ஐயரால் எழுதினதை பெ. ஆறுமுக முதலியார் ஆகிய எனக்கு சகலசுதந்திரம் கொடுத்துவிட்டபடியால், என் அனுமதி யில்லாமல் இதரமானவர்கள் எவ்விதத்திலும் அச்சிடலாகாதென கனம்பொருந்திய கவர்ன்மெண்டார் சட்டப்படிக்கு ரிஜிஸ்டர் காபிரைட் செய்யப்பட் டிருக்கிறது.

19 DEC 1924

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்.

முகவுரை.

இதை கண்ணுறும் நாவலர் பாவலருக்கு அடியில் கையொப்பமிட்டோன் அறிவிப்பது யாதெனில்:—

இச்சரிதையை யான் இயற்றி ஐந்து வருஷகாலமாயும் அச்சிடாமல் நோட்டு மூலமாகவே உபயோகித்து பல டிராமா கம்பெனிக்கு பயிற்றுவித்தேன். எனது அன்பார்ந்த நண்பர்களும் சில டிராமா நடிகர்களும் கேட்டுக்கொண்ட பிரகாரம் யான் இதை வெளியிட முயன்றேன். ஆகையால் இதில் ஏதேனும் குறைகுற்றம் இருக்குமாயின் அவைகளை பொருத்து குணங்களையே கிரகித்து அடியேனை தங்கள் குழந்தைபோல் பாவித்து இச்சிறுவனை ஆசீர்வதிக்கும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இப்படிக்கு,

மன்னார்குடி N. S. வெங்கடேஸ்வர ஐயர்.

உ

ஸ்ரீராமஜெயம்.

மார்க்கண்டேயர் சரித்திரம்.

டிராமா (முதற்பாகம்.)

விநாயகர் வெண்பா.

திங்களணிகெங்கையனே தினமுந்தவருமல்துதி
பங்கமில்லாதொண்டனவர் பாரில்—எங்கும்புகழ்
மார்க்கண்டேயர்சரிதை மகிழ்ச்சியாய்நானுரைக்க
கார்கொண்டமேனி கரிமுகன்காப்பு.

விநாயகர் துதி.

இராகம்-ஆனந்தபைரவி தாளம்-ஆதி.
(பாராமுகமேனையா என்ற வர்னமெட்டு.)

பல்லவி.

நாதா கிருபை செய்குவாய்—நம்பினேன்கண
நாதா கிருபை செய்குவாய்

அநுபல்லவி

பாதாரவிந்தமதை போதாபோற்றினேன்சூதா
வேதாமைந்தனைக் காக்க கொணுதாவாதாஅருள்தா
சீலா மலைமகளின்
பாலா மகிழுமாதி
மூலா மாதுவல்லபை
லோலா காரனுகூலா நாதா

ஆகுவாஹனமேறி அடியேன்முன்னேவாறீர்
வாகுடனேநல்வரம் ஈகுவீரேழைக்குநீர்
ஈசா எங்கும்புகழ்க
ணேசா தங்கமேனியுல்
லாசா துலங்கும்பிர
காசா பாபவினாச நாதா

பக்தன்மார்க்கண்டன் கதைசித்தமாய்நானுரைக்க
அத்தனார்புத்திரனே இத்தருணமெனைகார்க்க
வாரும் விக்கினமன்றி
காரும் எந்தன்குறையைத்
தீரும் ஆசிவார்த்தைகள்
கூறும் கடைக்கண்பாரும் நாதா

திங்கள்மதியணிந்த கெங்காதரனீன்ற
ஐங்கரவுந்தனையே செங்கரம்கூப்பியின்று
பங்க மன்றியில்லென்னெஸ்
வெங்க டேசன்பணிந்தேன்
மங்க ளமாயெனக்கு
சங்கத் தமிழ்மூன்றும்தா நாதா

கலைமகள் துதி.

(புகார்கைலி பனர்கைலி என்ற வர்னமெட்டு.)

இராகம்-இந்துஸ்தான்தோடி தாளம்-ஆதி.

கண்ணிகள்

வாணியே வந்துகார்ப்பாயே
வணங்கினே னம்மணிதாயே
வேணியேவர மருள்வாயே
வேண்டினே னுன்தன்சேயே வா

நான்முகன்தேவி யொய்யாரி
நானிலம்புகழும் கெம்பீரி
நாவினில்வருவாய் சிங்காரி
நல்மலர்பரிம ளலங்காரி வா

மார்க்கண்டன் கதையைநான்பாட
மாதாவே யருள்கவிபோட
மார்க்கமேஅறியே னுனைநாட
மாக்ஷிமைபுரிவாய் வினையோட வா
பங்கஜன் மருவிடும்பாரி
பலவிதகலைக்கு மதிகாரி
வெங்கடேச னுன்னைக்கோரி
வேண்டினேன் பாரோருபகாரி வா

முருகர் துதி.

(செந்தமிழுலகினில் என்ற வர்னமெட்டு.)

செஞ்சுருட்டி-ஆதி.

செந்தில்குமரவேலா கந்தாபார்வதிபாலா
வந்தாதரிமறைமூலா சேயன்போற்றினேன்
உந்தன்தாளினை சுசீலா

முடுகு

ஜெகமெல்லாம்திகழ்வுரும் குகனேகடம்பையனே
இகபரமதில்நீடும் சுகம்நல்கிடும்மெய்யனே
சூரர்துஷ்டர்களின் காலாசற்குணர்குறை
நோய்தீர்க்கு மனுகூலா
வள்ளிதெய்வானைபாகா புள்ளிமாமயில்வாகா
பிள்ளைமேல்தயைவல்லையா ஈவிரக்கமும்
எள்ளளவும்தா னில்லையா

முடுகு

வரதவெங்கடேசன்தான் அருந்தமிழைபுகல
வரம்தருவீரெந்தன் குறைகள்யாவும்அகல
வேண்டினேன்கார்க்கத்தொல்லையா கற்றறியானை
ஆண்டிடொண்ணாதா சொல்லையா செந

பிறையணிபெருமான் துதி.

(தேசோபசாரராஜாங்கம் என்றவர்னமெட்டு.)

இராகம்-மத்யமாவதி தாளம-ஆதி.

பல்லவி

சம்போசிவசங்கரனே சேயன்போற்றினேன்
சம்போசிவசங்கரனே

அநுபல்லவி

செம்பொன்னார்மேனியனே லம்போதரனேசன்ற
மகத்வமிகுத்த திகழ்பிரகாசா சம்

சரணம்

வெம்புலியையுரித்து வெண்ணுடையாய்தரித்தீர்
அம்புலியை தலையி லாபரணமாய்வைத்தீர்
பரனேயுன்திருவடி பரிவாய்பலனளிக்கும்
வரதவெங்கடேசன் கருணையுடன்துதிக்கும் சம்

மலைமகள் துதி.

(கார்க்கவேணும் என்ற வர்னமெட்டு.)

இராகம் - சங்கராபரணம் தாளம் - ஆதி.

பல்லவி

ஸ்ரீசங்கரபார்வதி இங்கருள்நீயேகெதி

அநுபல்லவி

திங்களையணிந்த தங்கமேனிசிவ
சங்கரன்றன்பாரி உன்னையே
வெங்கடேசன்கோரி வந்தேனே
நன்கருள்சிங்காரி ஒய்யாரி சம்

சரணம்

ஆலகாலமுண்ட நீலகண்டன்மகிழ்
சீலமானதேவி பாடினேன்
பாலனுன்னைக்கூவி காருமிக்
காலமென்னைமேவி எனவி சம்

பார்க்குள்ளேபுகழும் மார்க்கண்டன்கதைநல்
மார்க்கமாயான்பாட எனக்கருள்
வாக்குகவிபோட கடைக்கண்ணால்
நோக்குவுன்னைநாட தேட சம்

உ

ஸ்ரீராமஜெயம்.

மார்க்கண்டேயர் சரித்திரம்.

டிராமா முதற்பாகம்,

1-வது சீன்.

(ஆஸ்ரமம்.)

பாத்திரங்கள்:—மிருகண்டுமுனி, மருத்வதி, சிஷர்கள்.

மிருகண்டு வசனம்:—சிஷர்காள்!

சிஷர்:—பரமகுருவே! நமஸ்கரிக்கின்றோம்.

மிரு:—தீர்க்காயுஷ்மான்பவா! இவ்வளவுநேரம் எங்குசென்றிருந்தீர்கள்.

சிஷர்:—காவேரிக்குச்சென்று பற்களை துலக்கி நீராடி, சந்தியாவந்தனுதிகளை முடித்துக்கொண்டு வரலாமென்று போனோம் வழியில் ஒருகனியைக் கண்டோம், திகைத்து நின்றோம். ஆவல்கொண்டோம். அதிகநேரமாய்விட்டதேஎன்றுஓடோடியும் வந்தோம்.

மிரு:—காலக்கடன்களை முடித்துவிட்டீர்களா?

சிஷர்:—எப்படி முடிக்கிறது. அக்கனி எங்கள் மனதை கவர்ந்துவிட்டதே.

மிரு:—அப்பேர்ப்பட்ட கனியாது?

சிஷர்:—ஏன்; சொல்லுவோமா? தாங்கள் வேலைவிடுவதற்கா!

மிரு:—சீ சீ என்னடா! துஷ்டத்தனமாய் பேசுகிறீர்கள்.

சிஷர்:—இல்லை, தாங்கள் அதை புசித்துவிட்டால் எங்களுக்குகிடையாமல் போய்விடுமே என்றல்லவோ சொல்லுகிறோம்.

மிரு:—எனக்கொன்றிலும் ஆவல் இல்லை, நீங்கள் நித்திய கர்மானுஷ்டானங்களை செய்யாமல் மாங்கனிமீதும், தேங்கனிமீது மாசைகொண்டிருங்கள், சுகுண சிஷர்காள்!

சிஷர்:—நாங்கள் கண்டகனி மாங்கனியுமன்று, தேங்கனியுமன்று அசல் லேடிக்கனி.

மிரு:—போடா மடையர்காள்!

சிஷர்:—எங்கு போவது?

மிரு:—என்தேவி மருத்வதியை அழைத்து வருவீர்.

சிஷர்:—சுவாமி! இதோ அழைத்து வருகிறோம்.

(செல்லல்.)

(மருத்வதி பிராப்தம்)

பிரபோ! அடியாள் வந்தனம்.

மிரு:—பெண்ணே! மங்கள முண்டாகுக.

மரு:—நாதா! அடியாளை அன்புடனழைத்தகாரணம் அறியஆவலாயிருக்கிறேன்.

மிரு:—கோகிலமே! யானுன்னைவிட்டுதற்காலம்பிரியவேண்டி இருக்கிறது.

மரு—ஹா! என் நாதா! என்னவிசேஷம், எங்கு செல்லப்போகிறீர்கள்.

மிருகண்டு.

கண்மணியே பெண்மணியே என்ற வர்னமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

சொர்னமேயா னன்னவாக னன்னவைக்குசென்றுவாறேன்
சேயிழையே பூங்குயிலே போகவிடை ஈகுவாயே

மருத்வதி

மன்னவரே என்னசெய்வேன் எவ்வாறும்மைநான் பிரிவேன்
மாயச்சூதா என்மேல்வாதா அடியாளும்வாறேன் நாதா

மிருகண்டு

கண்மணியே விண்மணியே கட்டழகே கலங்காதே
காதலியேநோய்யவேண்டாம் தெய்வலோகம்போய்வருவேன்

மருத்வதி

வானவரே தானவரே நானுமுந்தன்கூடவாறேன்
கானகத்தி லின்னலுறும் தனிமையாய்நா னிருக்கேன்

வசனம்

கொடிய காட்டுமிருகங்கள் வசிக்கும் இக்காட்டில் இக்கட்டு நேரும் என்னையனே.

மிருகண்டு

தெய்வலோகத்திற்கு பெண்ணே தேவிவரலாகாகண்ணே
தேசத்தோர்கள் ஏசிடுவர் நேசியுன்னைக்கூட்டி போகேன்

மருத்வதி

மன்னவரேஎன்னை விட்டுப்போக துணிந்தீரோ ஐய்யா
மங்கையுமைபின் தொடர்வேன் தெய்வலோகத்திற்குமெய்யா

மிருகண்டு

தோகையரேவாடவேண்டா தொந்தரையேது முருது
ஆகையினால்விடைஈவாய் ஏகிவாறேன் வானுலகம்

வசனம்

நேரமாய்விட்டது, சீக்கிரம் விடையளிப்பாய் கண்மணி!

மரு:—காதலா! புலி, சிங்கம், கரடி முதலிய கொடிய மிருகங்கள் வாழும் இவ்வனத்தில் அடியாள் தனிமையாக எப்படி இருப்பேன். என்மனம் தங்களை "பிரியேன்" என்கிறதே. ஆவி சோருதே. அங்கம் பதருதே.

மி:—கண்ணாட்டி! வருந்தாதே, சீக்கிரமாக வந்துவிடுகிறேன்.

சென்றுகனி பரித்துக்கொண்டு (என்ற வர்னமெட்டு.)

கண்ணிகள்.

மானேதெய்வ லோகத்திற்சென்று வருவேன்
நானே சீக்கிரமாயின்று செக்
தேனேஉள்ளம் கலங்கிடாதே மனம்

தேர்வாய்மிக துயராட்டாதே
தையலே வாட்டாதே
நீதனுகி டாதே—வரும்
அதிதிக்குமுதளி மாதே

மருத்வதி

ஷை வர்னமெட்டு:

என்னை—மாலைசூட்டின முனிநாதா இந்த
மாதுன்பின்தொடரொண்ணுதா அடி
யாளும்நின்கூடவருவேன் களை

யாய்மெலிந்தால் ஜலம்தருவேன்
உதவிமிக புரிவேன்
தனித்திருந்து உருவேன்—உம்மைத்
தானும்விட்டால் துயர்பெறுவேன்

வசனம்.

நாதா! வழியில் தங்களுக்குகளையுண்டாகிவிட்டால் யார்உதவிசெய்பவர்கள். தாங்கள் தனிமையாக போகக்கூடாது. தங்களைப் பிரிந்து ஒருநிமிஷம்கூட என்னுயிர் தரியாது.

மிரு—காதலி! நீஎன்னுடன் வரக்கூடாதென்று நான் தடைசெய்யவில்லை. நீயோ பசும்மேனியுள்ள பெண்மணி, மெல்லிய பாதங்களுடையவள். நாம் காடு, மலை முதலியவை கடந்து தேவலோகம் செல்லவேண்டும் ஆகையினல், நீ;

ஷை வர்னமெட்டு.

கல்வியிலும்முள்ளிலும் நடந்து மிக
தொல்லையுறும் என்னைதொடர்ந்து அங்கு
மெல்லிமாடமாளிகையுண்டு வானோர்
செல்லாவுப சாரமுவுண்டு
நல்லசத்திர முண்டு
நானிந்திரனைகண்டு வாரேன்
நலமுட்ஞசிமொழி விண்டு

மருத்வதி வசனம்.

நாதா! என்பிடிவாதமாக பேசுகிறீர், தங்கள் மொழியை அடியாள் மீறலாகாது. தங்களைப்பிரிந்தும் என்னுயிர் நில்லாது. இந்த தர்மசங்கடத்திற்கு என்னசெய்வேன்.

மிரு:—கண்ணே! வருந்தாதே, நீஇங்கிருந்து ஈசனைபஜித்துக்கொண்டு காலம் கழிப்பாய், யாரேனும் அதிதிகள் வந்தால் அவர்களுக்கு உபசாரம் செய்து அன்னமளிப்பாய், யான் சீக்கிரமாய் வந்துவிடுகிறேன் என்சொல்லை கடப்பது தர்மமா.

மருத்வதி
ஷை வர்னமெட்டு

வேதமோதிடும்பிரகாசா சென்று
வேகம்வரவேணும்பிராணேசா சிவன்
பாதம்பூஜைசெய்வேனே மிக
பக்திசிரத்தை யுடன்நானே
பார்த்ததி திக்குத்தானே
பாலன்ன மளிப்பேனே—தங்களு
பதேசமொழியை மீறேனே

வசனம்.

சீக்கிரமாக வரவேண்டும் என்னுயிர்த்தலைவா.

மிரு:—இதோ அரைநொடிக்குள் வந்துவிடுகிறேன்.

(மறைதல்)

2-வது சீன்.

இந்திர சபை.

பாத்திரங்கள்:—இந்திரன், தேவர்கள், முனிவர்கள்.

இந்திரன் தர்பார்.

திரிலோகமும் (என்ற வர்னமெட்டு.)

இராகம்-ஸ்ரீ. தாளம்-ரூபகம்

கண்ணிகள்

அந்தமுடன் இந்திரசபையாளும்
அமரேசன் காணே
வந்தேன்தேவர்கள் எங்கும்சூழவே
வானவர் ரிஷிகளும்கூட
மேனகை நாரதர்பாட
தேன்மொழி மாதர்களாட
தேவியுமென் பக்கம்நாட
தீர வீர சூர நாரணன் மலரிணைபோற்றும் அந்த

நாரதர் பிராப்தம்.

இந்திரன் தரு

இராகம்-ஸ்ரீ. தாளம்-ஆதி.

பல்லவி

வாரும்வாரும் முனிநாதா—வணங்கினேனுட்
காரும்காரும் முனிநாதா

அநுபல்லவி

பாரும்அதிக்கு முந்தன்
பதமதையே இதமுடனே பணிந்தேனே வா

சரணம்

வேதத்தில் கரைகண்டோனே சாஸ்திர நூல்களை
மாதவமுரு கொண்டோனே
பாதாரவிந்த சேவை
பாக்யம்குறை போக்கிடுமே சிலாக்கியமாக வா

மூவுலகசஞ்சாரியே மூவர்முதலாய்
தேவர்க ளுபகாரியே
பாவாய் பொழுதுபோக்கும்
பாலன்வெங்க டேசன்கவி யோடித்தினம் வா

வசனம்

வானவோத்தமரே! நமஸ்கரிக்கிறேன். ஆசனத்திலமருங்கள்.

நாரதர்:—கல்யாண், இந்திரா!

இந்திரன்:—(சித்ரசேனனிடம்) ஹே சித்ரசேன! நடனப்பெண்களை வரவழைத்து நம் சபையின்கண் நர்த்தனம் செய்விப்பாய்.

சித்திர:—உத்திரவுப்படி செய்ய சித்தமா யிருக்கிறேன்.

(நடனம்செய்தல்.)

இந்தி:—முனிவர்களே! நம் அவைக்கு என்ன குறை, யாவரையும் இந்த நர்த்தன காக்ஷியானது ரெஞ்சித்திருக்கவேண்டும்.

நார:—இச்சபைக்கு ஓர் குறையுமில்லை. உனக்கும்யாதொருகுறையு மில்லை. ஆனல் எனக்கு மாத்திரம் ஓர் சந்தோஷம் ஏற்பட்டிருக்கிறது. அதை குறையென்றும் சொல்லலாம்.

இந்தி:—என்ன! இவ்வாறு சாற்றுகிறீர். திரிகால ஞானியாகிய தங்களுக்கென்ன குறை, தங்கள் எண்ணத்தை தெரிவிக்க வேண்டும்.

நாரதர்:—ஒரு சின்ன சந்தேகம்! அது யாதெனில். ப்ரம்ஹசர்யம், கிருஹஸ்தம், வானப்ரஸ்தம், ஸந்நியாஸம், அதிவர்ணாஸ்ரமிகளென்றவர்களுக்குள்ள தாரதம்மியம் உனக்குத் தெரியுமோ தெரியாதோ என்பதுதான்.

இந்:—தாங்கள் அறியாததும் உண்டோ? இதுவரையில் எனக்கு அவைகளின் தாரதம்யம் தெரியாமலே யிருந்தேன். இப்பொழுதோ தங்கள் மொழிகளா லவைகளை அறிய ஆவலாயிருக்கிறேன்.

நார:—நான்வந்து நேரமாய்விட்டது. நான் மூன்றேமுக்கால் நாழிகைக்குமேல் ஓரிடத்தும் தரிக்கக் கூடாதென்று பிதிர்சாபம்

ஏற்பட் டிருக்கிறது. இதை நீ யறிவாய். உன்வேண்டுகோளின் படி சுருக்கமாய் கூறுகிறேன் கேள்? பிர்மாசர்ய ஆஸ்ரமத்தி னர் காலையில் நீராடி நித்யகர்மானுஷ்டானங்களை சரிவரச் செய்யவேண்டும்! மறையுணர வேண்டும். கௌபீனம்தான் கட்டக்கூடும். பிக்ஷைவாங்கி யுண்ணவேண்டும். இதை மீறு வோர் இங்கு வரக்கூடாது. அவர்களுக்கு யாதொரு மரி யாதையும் இங்கு கிடையாது.

இந்:—விதிதவறினோர் இச்சபையில் யாவர்?

நார:—ஒருவரையும் காணேன்.

இந்:—மெத்த சந்தோஷம், இரண்டாவது ஆஸ்ரம முக்கியவிதி களைக் கூறுவீர்.

நார:—இரண்டாவது, க்ரஹஸ்தாஸ்ரமத்தில் இல்லறம் சரிவர நடத்தவேண்டும், அவர்களுக்கு பிள்ளையில்லையேல் யாதொரு மரியாதையும் இங்கில்லை.

இந்:—பிள்ளை யில்லாதவர் இங்கு யாவர்?

நார:—பூவுலகத்திலிருந்து வந்திருக்கிறமிருகண்டேயருக்குபிள்ளை கிடையாது.

இந்:—ஹா! அப்படியா, ஆனல் அவரை இச்சபையில் சேர்த்துக் கொள்ளாது விலக்கி விடுவோம்.

(இதைக்கேட்ட மிருகண்டு தனக்குள்) ஹா ஜெகதீசா! நமக்குஇங்கு யாதொரு மரியாதையுமில்லை யென இந்திரன் தீர்மானித்து விட்டான். பாலன் இல்லாப் பாவியாகினேனே. நாம் இனி இங்கு இருக்கொண்ணாது, தேவரும் மாதவரும் என்னை நிந் தனை செய்துவிட்டார் ஆகையினல் நான் செல்கிறேன். ஹா! தெய்வமே, அங்குமனையாளுக்கு இதை எவ்வாறு புகல்வேன்.

(செல்கிறார்.)

3-வது சீன்.

ஆஸ்ரமம்.

பாத்திரங்கள்:—மருத்வதி, ரிஷி கன்னியர்.

மருத்வதி வசனம்.

ஹா! என்நாதன் தேவலோகம் சென்று சீக்கிரம் வருவதாகச்சொல்லிச் சென்றூர். இன்னம் வரக்காணேன், அவரை பிரிந்ததினல் ஒரு நிமிஷம் ஒரு யுகமாக தோற்றுது. அதோ யாரோ வருகிருர். சற்று கவனிப்போம்.

ரிஷிகன்னியர் பிராப்தம்.

மரு:—தாய்மார்களே! வாருங்கள் அடியாள் நமஸ்கரிக்கிறேன்.

கன்னிகள்:—மங்கள முண்டாகுக?

மரு:—அம்மா! நீங்களில்லாத இந்த இடம் வீணுய் அசுத்தமாயிருக்கிறது. ஏதோ யான் முற்பிறப்பில் செய்த பாக்கியமோ தாங்கள் இவ்விடம் வந்தது, தாங்கள் யாவர்? தங்கள் விருப்பம் யாதென்றறிந்து அதன்படி செய்யக் கார்த்துக்கொண் டிருக்கிறேன்.

கன்:—அம்மா! நாங்கள் முனிவர்களாலும், தேவர்களாலும் பூஜிக்கப்படும் பார்வதியம்மனுடைய திருவடியை பக்தியாய் பூஜை செய்யும் ரிஷிகன்னியர், நாங்கள் ஓர் காரியத்தை முன்னிட்டு இவ்வழியாக வரும்போது க்ஷுத்பாதை அதிகரித்ததால் நின்னுஸ்ரமம் தேடி வந்தோம்.

மரு:—ஆஹா! அப்படியா, என் நாதராக்ஞை பிரகாரம் யான் இவ்வழியாக வரும் அதிதிகளுக்கு அமுதளித்து காலம் கழித்து வருகிறேன்.

உட்காருங்கள் தாய்மார்களே! பஞ்சபக்ஷ பரமான்னங்கள் தயாராயிருக்கின்றது. தாங்கள் அமுதருந்தி பிறகு தங்களிஷ்டப்படியேகலாம்.

ரி-கன்:—அம்மா! நீ மஹா உத்தமி, உன் கணவன் எங்கே? குழந்தைகள் எங்கே? அவர்களை கண்ணூரக்கண்டு ஆனந்தமடைந்து உன் குழந்தைகளை ஆசிர்வாதம்பண்ண விரும்புகிறோம்.

மரு:—தாய்மார்களே! என் நாயகர் இந்திரசபைக்குச் சென்றிருக்கிறார் எனக்கு ....

ரி-கன்:—என்னசொல்லுகிருய்?

மருத்வதி.

ராமபஜனு என்ற வர்னமெட்டு

ராகம்-தேசிகமுகாரி தாளம்-ஆதி.

அடியாளடைந்திலேனே புத்திரபாக்யம் அ

அடியாளீன்றறியேன் அழகானதொருசேயை
படியில்பாவமென்செய்தேனே யாரைவைதேனோ அ

குவலயத்தோர்மகிழ குழந்தையொன்றேனுமில்லை
தவமாதசிரோன்மணிகாள் மாதென்னசெய்வேன் அ

வசனம்.

தாய்மார்களே! அடியாள் புத்திரசந்தான மற்ற பாவி.

ரி-கன்:—ஹா! அப்படியா, ஐயோ! நீமலடியா! பாவியா! ஆஹா நாங்கள் செல்கிறோம்.

சும் சும் சும்-என்ற மெட்டில் பேதம்.

சேயற்றோரைக் கண்டால் நாசம் சேதியெதும்விண்டால்மோசம்
சார்ந்திடுமென் முன் நில்லாதே போ போ போ

மருத்வதி.

ஷை வர்னமெட்டு.

கோபமோ என்மீது மன ஸ்தாபமோ தாய்மாரே இது
ஆகுமோ அன்னமருந்த வா வா வா

ரி-கன்:—பழுதுரும் மாதவம் மேலும் வெங்குறையே.

மரு:—வழுத்தாததை தீர்ப்பதே தங்கள் முறையே

ரி-கன்:—மலடி பேசாதே.

மரு:—மாதென்னை ஏசாதே.

ரி-கன்:—புத்திரனற்ற வீட்டிலுண்டால் மெத்தமெத்த பாவமுண்டாம்.

இத்தலி யப்பாலெட்டியே செல் செல் செல்

வசனம்.

மலடர்களை காண்பதே மிகவும் பாவம், அவர்களிடம் சம்பாஷித்தால் கேட்கவேண்டியதேயில்லை. அவர்களன்னம் உண்டாலோ ஹா! சங்கரா! எங்கள் தவமெல்லா மழிந்து விடுமே. செல்லுவோம்.

(மறைதல்.)

மருத்வதி. வசனம்.

தாய்மார்களே! போகாதீர்கள். கோபம்கூடாது. ஹா! சென்றுவிட்டார்களே. "கைக்கெட்டினதும் வாய்க்கெட்டாமல் போய் விட்டதே" ஜெகதீசா! என்னசெய்வேன், தவத்திற்சிறந்த கன்னியர் என்னகத்தில் வந்தும் உண்ணுமல் போய்விட்டனரே! என்னை பரிஹாசம் செய்தல்லவோ சென்றூர்கள். இந்திர சபை சென்ற மாமுனிவரையும் காணேமே! எங்களிருவருக்கும் விருத்தாப்பியதசை யணுகிவிட்டதே, எவ்வாறு பாலன் பிறப்பான். ஈசா!

விருத்தம்

சேயிழைமொழியைக்கேட்டு சோருதென்னுவிஜயோ
ஆயிழையென்முன் பேசலாகாது என்றுஏசி
நாயினும்கேடாயல்லோ நவின்றுமேசினந்துசென்றூர்
ஆயினும்என்னகாலம் அர ஹராவிஸ்வனுதா.

பசுபதியாகிய-என்ற வர்னமெட்டு

இராகம்-செஞ்சுருட்டி தாளம்-ஆதி.

ஐஆஹா நானென்ன செய்வேன்
ஐயோநானெவ்வா றுய்வேன்
அழுது தவிக்கலானேன்-தெய்வமே தெ தெ

கன்னியராமுது
என்னகந்தனிலே
உண்ணுமல்போனரே-தெய்வமே தெ தெ

பாலனில்லாத்துயரால்
மலடியெனும்பெயரால்
ஞாலத்தில் ஏசலுற்றேனே-தெய்வமே தெ தெ

திங்களணிந்த தேவா
மங்கையர்மொழிகேட்டு
அங்கமுருகுதையோ-தெய்வமே தெ தெ

வசனம்

ஹே, ஆபத்பாந்தவா! அனுதாரக்ஷகா! தேவலோகம் சென்றவரைக் காணேனே என்னை தனிமையாக கிடந்து துயரில் முழுகும் படி செய்வது உமக்கு தருமமா! ஆறுதல் தேறுதல் சொல் பவரையும் காணேம் அகிலத்தைப்படைத்த என்னப்பனே, நீயே கெதி, என் கவலையை நீக்கக்கூடாதோ?

(திரைவிழல்.)

4-வது சீன்.

பாத்திரங்கள்:—குறத்தி, விகடசிஷியன்.

குறத்தி தரு.

தேதமேருபையா என்ற வர்னமெட்டு.

கொல்லிமலே குறத்தி குறிசொல்லவந்தேனே
குறிசொல்ல வந்தேனே—அம்மா
கோதையே தேனே
குறக்கூடை யிடுக்கியே
கோல்கையி லடிக்கியே கொ

கோணகொண்டை யிட்டேன்—என்
கொசவம்தொங்க விட்டேன்
வானவர் முனிவர்கள்
யாவர்க்கும்குறி சொன்ன கொ

நெத்தியில் திலகபொட்டும்
நேர்விழிக்கு மையிட்டு
நேசன் என்னெஸ் வெங்க
டேசன்கவி படிக்கும் கொ

வேறுமெட்டு.

பச்சைகுத்தலையோ—அம்மா பச்

பிச்சைகாரியென்றெண்ணி அச்சம்வேண்டாமம்மணி
இச்சையுள்ளபூவையர்க்கு கச்சிதமாய்குத்திடுவேன் பச்

வண்டுப்பச்சை நண்டுப்பச்சை
பூரான்பச்சை கீரிப்பச்சை
தேளுப்பச்சை பாம்புப்பச்சை
மச்சம்பச்சை முதலைப்பச்சை பச்

குறத்தி வசனம்.

யான்தெய்வலோக வாசியாயிருந்தும் மலைச்சாரல்களில் பந்து மித்ரர்களுடன் வாசம்செய்து கொண்டிருப்பது வழக்கம்.

சிஷ:—யாரடி அவள் பொம்புளே, ஷோக்காருக்கா ஐய்யா.

குற:—ஐயே! நான் வனக்குறத்திடா ஐயே! எங்கள் சாரி அணி, லாமை, யானை திங்கிறஜாதியல்ல நாங்கள் உலக்கையால் காது குத்தி உரலினுல்தக்கை போடுறஜாதி. அறுந்தகாதுக்கு தக்கையும், அறுகாத காதுக்கு குணுக்கும் போடுகிறஜாதி, நாங்கள் ஒண்ணுவிட்டு சித்தப்பனைக்கட்டி கொள்றஜாதி, நாங்கள் சுப்ரமண்ய சுவாமிக்கு பெண் கொடுத்தஜாதி, எந்தஜாதியிலு முயர்ந்தஜாதி ஓடுகிற சாரப்பாம்பைப் பிடித்து திங்கிறஜாதி.

சிஷ:—பேஷ்! நல்லாருக்கு இந்தக்குறத்தி பூனை, யானை, திங்கமாட்டாளாம், ஆமைக்கறியும், பாம்புக்கறியும் சாப்பிடுவாளாம் இவள் ஜாதிப்பெண்ணை சுப்பரமண்யர் கொண்டதால் எல்லா ஜாதிக்கும் மேலான ஜாதியாம். குறச்சிறுக்கி இப்படி சொல்கிருள். சரி நீங்கள் என்ன தொழில் செய்வீர்கள்.

குற:—ஐய்யே, பச்சைகுத்துவோம், குறிசொல்லுவோம், வேறு வகை பச்சிலை மூலிகள் கொடுப்போம். எங்கள் சாரியில் வண்டு நக்கினபூவை எச்சிலன்றி சூடுவோம், காய்கிழங்குகள் புசிப்போம், தங்கம் வெள்ளிநகைகளை யணிவோம். புலிப் பல்லை தாலியாகப் பூண்டு பாசி மணிகளை நகையாய் பூணுவோம். ஐய்யே!

சிஷ்:—அவ்வளவு கெட்டிக்காரர்களா நீங்கள். கூட்டம் தேர் திருவிழாக்களில் முடிச்சவிழ்த்துத்திருடி விட்டு பார்த்தவரிடத்தில் உதைவாங்குகிறஜாதி தானே, போதும் நிறுத்து. நான் எங்களம்மணியிடம் உன்வரவை அறிவிக்கிறேன்.

(மருத்வதி பிராப்தம்)

வசனம்.

யாரம்மா நீ எந்தவூரு உன்பெயர்யாது. உனக்கென்ன தொழில் விவரமாய் சொல்லுவாயம்மா.

குற:—அம்மணி! யான் குறிசொல்லும் குறத்தி என்வறலாற்றை தெரிவிக்கிறேன் கேளுங்கள்.

எந்தனதுதிரு— மெட்டு.

எந்தன்வரலாறு மூறும்பேரும் கேட்டதாயே
அந்தமாயனைத்தும் யான்பகர்ந்திட கேட்பாயே
ஆனைமலை பூனைமலை எங்கள்மனைநாடு—அந்த
அமரேசர் வாழுமலை எங்கள் திருநாடு
கொல்லிமலை நெல்லிமலை எங்கள் மலைநாடு
குமரேசர் வாழுமலை எங்கள்மலைநாடு
சோணமலை கோணமலை எங்கள்மலைநாடு
சொக்கேசர் வீற்றிக்கும் எங்கள்மலைநாடு
கொள்ளிமலை வெள்ளிமலை எங்கள்மலைநாடு
குடியிருந்து குறிசொல்லுவோம் நாங்களடியம்மே
பச்சைமலை கொச்சிமலை எங்கள்மலைநாடு
பாலவடி வேலனுள்ள பழனிமலைநாடு
சங்கறற்கும் பார்வதிக்கும் குறியுரைத்தகுறத்தி
எங்கள்குலத் தொழிலில்யானே யாருமெச்சும் சமர்த்தி.

மருத்வதி வசனம்.

அப்படியானல், என்மனதிலுள்ளதை யுரைப்பாய்.

குற:—அம்மா! தாம் இரண்டு ரிஷி கன்னியரால் ஏசப்பட்டு வருந்துகிறீர்கள்.

மரு:—வாஸ்தவம்தான், என்ன ஆச்சரியமடி! இது சரி, என் கையைப் பார்த்துச்சொல்.

குற:—தேவதைகளை மனதில் போட்டுக்கொண்டு தான் குறிசொல்வதுவழக்கம்.

ஷெமெட்டு.

கெங்கையணி சங்கரனுரீன்றகணநாதா
மங்கைவள்ளிவேலா குகனேநீவரம்தாதா
காத்தவராயன் வீரன்சங்கிலிபேயாண்டி
தோத்திரம்செய்தேனுன்னையே காரும்முனியாண்டி
ஓங்காரக்காரியவள் உக்ரமஹாமாயி
ஆங்காரிக்காரியாளே ஆளாய்காளியாயி
தேவதைகளைநினைக்க திரேகம்சிலுக்கிறதே
ஆவலாய்கேளுமம்மா குறிசொல்வேனிப்போதே

குறி சொல்லல்.

ஷெ மெட்டு.

மிருகண்டேயர் பத்தினிமருத்வதியும் நீயே
மாமுனியை பிரிந்ததினால் மயங்கலுற்ருய்தாயே
பாலனில்லா சோகத்தினால் பதறுகிருயம்மா
ஆலமுண்டோரருளிடுவா ரழுகவேண்டாம்சும்மா
மாதவம்மாத ரிருவரன்னமுண்ணவந்தார்
பாதகியென்றுனே பரிஹாசமாயுகந்தார்
கண்டபடிபாவிமலடி யென்று யேசிநின்ருர்
உண்டால் பாபமென்றுரைத்து ஆயிழையர்சென்ருர்
உந்தனருமைக்கணவர் வந்திடுவாரம்மே
அந்தமாயடைந்திடுவீ ரோர்பிள்ளைவரமே
அழகானபாலகனை யீன்றிடுவாய்நீயே
பழுதன்றிபுகழ்பெறுவான் பாங்கியறிவாயே
கலைஞானம்கற்றவனாய் பிறந்திடுவானம்மா
நிலையில்லாபக்தியுடன் வாழ்ந்திடுவானம்மா

ஆனாலொருகுறையுமுண்டு அம்மணியேகேளும்
நானிலத்திலீரெட்டு வயது தானேமீளும்
பாலனிதைசெவியுற்று பக்தியுடன்தானே
ஆலயங்கள்தோறும் பூஜையனுதினம்செய்வானே
கடையூரில்காலனுந் தன்மகனைக்கட்டவருவான்
கடவுளது கிருபையாலென்றும் பதினாறுயுள்பெறுவான்
கவலைபடவேண்டாமம்மா தெரிந்தமட்டும்சொன்னேன்
குவலயத்திலிவைகளெல்லாம் உண்மையாகநடக்கும்

மருத்வதி வசனம்.

பெண்ணே! உன் குறிகளுக்கும் உனக்கும் என்மேலிருக்கும் பக்ஷத்திற்கும் மெச்சினேன் நீஇந்த ஆபரணங்களைப்பெற்றுக்கொள்.

(அளித்தல்.)

குற:—அம்மா! ஏதோ எனக்கு தெரிந்தவரையில்சொன்னேன் நாழிகையாய்விட்டது போய்வாரேன்.

(செல்லல்.)

மருத்வதி வசனம்.

குறத்தி யெனக்கு புத்திரஸந்தான முண்டாகுமென்று தெரிவிக்க மகிழ்ச்சியடைந்தேன் என் நாதனைக்காணமல் எனக்கு துக்கமதிகரிக்கிறது. ஹா ஜெகதீசா! என்னசெய்வேன்.

ஆயனபிவாரி என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

இன்னம்வரக்காணேனேய்யோ என்னுருயிர்நாதன்
என்னசெய்வேன் ஏங்கவைத்தார் இனியமலர்ப்பாதன்
இந்திரனவைக்குச்சென்று இந்தபொழுதாச்சே
சந்திரவதனனின்னம் வாராதென்னவச்சே
வாஸவனவையிலேது முற்றதோவபாயம்
ஆசையாளனுவலாய் மேவாததென்னமாயம்

வசனம்.

ஆவிசோருதே! அங்கம்பதறுதே! ஈசா! ஏதோ ஓசை கேட்கிறதே பார்க்கிறேன்.

(மிருகண்டு பிராப்தம்)

மரு. வ-ம்:—நாதா! வந்தனம்.

மி:—கல்யாண்! மங்களமுண்டாகுக.

(முகத்தைப்பார்த்து.)

கண்ணே! சந்திர பிம்பம்போல் எப்போதும் துலங்கும் உன்திரு முகம் வாட்ட மடையக்காரணம் யாது?

பாண்டியன்குமாரியான என்ற வர்னமெட்டு.

ராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி

கண்ணிகள்.

நங்கையேயுனக்குவந்த சோகமேதடி—உற்ற
சங்கதிவிவரமா யெடுத்துவோதடி
மங்கையேவுன்மனம் நோகலாகுமா
சங்கையன்றிசாற்று வினைவிணேபொகுமா

அன்னமேயிதுகாறும் நானுன்னேயேவிட்டு—சென்று
இன்னிமிஷம்மேவலான தாலோஇக்கட்டு
என்னதான்நடந்தது இயம்புவாயடி—மிக
இன்னலாய்வருந்திடவோ காலமீதடி

வசனம்:—நாயகி! மனேக்கவலையாது?

மரு. வ-ம்:—கண்ணேபிசைந்து ஐயோ, தெய்வமே! என்நாயகரிடத்தில் என்சொல்வேன் நாவெழவில்லையே, ஜெகதீசா!

மி;—ஏன் என்னென்னமோ சொல்லியழுகிருய். ஒன்றையுமொளியாதே, சீக்கிரம்கூறு நானுன்னேவிட்டுச்சென்ற முதற்கொண்டு இதுவரையில் நடந்த சமாசாரங்களே ஒன்றும் மறைக்காமல் விவரமாயெடுத்துரைப்பாய்.

மருத்வதி-தரு.

அமுதமூதேக்கோ என்ற வர்ன[illegible]டு.

ஐயையோ தெய்வமே யாதென்[illegible]சால்வேன்
யானென்னசொல்வேன் எவ்வ[illegible]சால்வேன்
கானங்கள்பாடும் க[illegible]மறை நாடும்
கன்னியரிருவரன்ன [illegible]றுந்தவந்தார்
அருமையாகவே அறிவையானும்
அறுவகைசுவையுடனமுது படைத்தேன் ஐ

O-1892MV13,N N14
85558

வசனம்:—பிறகு அவர்கள் உன்குழந்தைகள் எங்கே என்று கேட்டார்கள் அதற்குயான்

ஷை மெட்டு.

குமாரனில்லையென் குருகுலமாதர்
கடிந்துசென்றாரன்ன மருந்தாமல் நாதா

மிருகண்டு வசனம்.

ஹா! அப்படியா. இதற்கென்னசெய்வோம் (தனக்குள்) ஜெகதீசா! "பட்டகாலிலேபடும் கெட்டகுடியேகெடும்" என்ற ஆன்றோர் மொழிவீண்போகுமா இந்திரனவையில் வானவரும், யான் புத்திரனில்லாப்பாவியென்றும், சுவர்க்கம் வர அருகனல்லவென்றும் ஏசினர்கள். ரிஷிகன்னியர்களும் நம்மகம் குழந்தைகளில்லாவக மென்று வெறுத்து அன்னமுண்ணுமல் சென்றார்கள் என் செய்வேன், அநாதரக்ஷகா.

விருத்தம்.

மேதினியோர்களேச மடக்கொடிமனதுநொந்தாள்
ஏதினிசெய்வோமென்று ஏங்குதேயெந்தன்நெஞ்சம்
மாதினமறிந்தாளில்லை மஹாராஜனிந்திரன் செய்கை
ஓதிடில்கருகிமேனியுருகியேகதறுவாளே

மருத்வதிவசனம்.

நாதா! கவலைப்படுவதில் பலனென்ன

மி:—(நீர்சொரிய) அடி! ரிஷிகன்னியருன்னை மலடியென்று ஏசினதாக பகர்ந்தனையே, இதனால்தான் இவ்வளவு ஏக்கமென்று நினைக்கின்றனையோ. இல்லை, இல்லை,

மரு:—வ-ம் நாதா! அப்படியானால் இதைதவிர வேறு

ராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

கவலையுண்டானது மேனோநாதாவுமக்கு
கவலையுண்டானதுமேனோ

அநுபல்லவி.

கவலையுண்டாகலாமா மாதவாசதாகுமார
குவலயத்திலுற்ற கருணைக்கடலேமன கவ

சரணம்.

படியில் பாதகமேதும் பாரிகான்செய்திட்டேனே
அடியாள் விவரமாய் அறியச்செப்புமிப்போ கவ
பூந்தாமரன்வரைந்த பொறிபோல்தானேநட்க்கும்
சிந்தாகுலமேயுற்று சிதைந்துகரைந்துநோக கவ

வசனம்

மதியிற்சிறந்த மாதவரே! அடியாளேதேனும் குற்றம் செய்தேனே தங்கள் பாரிக்கு, தயவுவைத்து செப்பக்கூடாதா.

மிரு:—காதலி! யானென்னவென்று புகல்வேன், என் துர்பாக்கியத்தை ஹே ஈசா!

மரு:—நாதா! தெய்வலோகத்தி லேதேனும் விபரீதம் நடந்ததோ, அடியாளிடம் அன்புகூர்ந்து தெரிவிக்கவேண்டும்.

மிரு:—அடி! நாம் முற்பிறப்பில்செய்த தீவினையால் இப்பிறப்பிலிப்படி வாய்த்தது போலும்.

நொண்டிச்சிந்து.

கோலமணிசுடர்விளக்கே—கண்ணே
கோதையேமருத்வதியே வோதிடக்கேளாய்
பாலனில்லாப் பாவமடி—இந்திரன்
பார்சபையைசார்ந்தபோது வெம்பலுற்றேன்
சேயனில்லா சோகமடி—அங்கு
சென்றுமனம்வெந்துயிரால் நொந்துஏங்கினேன்
சூர்முனி தியாகமடி—எனக்கு
சுவர்க்கமில்லையென நாரதர்சாற்ற
விண்ணவர்கோன் வாசவன்—என்னை அவை
விட்டகற்றவேணுமென்று திட்டமாய்செப்ப
கண்ணில்நீ ராருய்பெருக—பஞ்சமா
பாதகன்நான்வெட்கமதால் வாதனைகொள்ள
யாருமறியாமலே—இக்ஷணம்
யாமுனுன்னை நாடியே வோடோடியும்வந்தேன்
சோருதென் னுவியடி—எவர்
சோதனையோ பூதலத்திலேசலுற்றோம்

நாமென்ன செய்வோமடி—நான்முகன்
நானிலம்நகைக்கவோ நம்மைபடைத்தான்
தீமையே வாச்சுதடி—ஏனோ
தீவினைசூழ்பூவினிலே ஜென்மமெடுத்தோம் கோ

மருத்வதி வசனம்.

ஹா! அப்படியாசெய்து விட்டார்கள். இதைக்குறித்து நாமென்செய்வது இவ்வபாயம் நம்மை விட்டகல நாம் ஈசனைக்குறித்துத் தவம் செய்வதே நலம். இது தாங்களறியாததா? நான்சொல்லவும் வேண்டுமா.

மிரு:—நீசொல்வதும் வாஸ்தவமதான் ஆதலால் நான் வனம்சென்று தவம் புரிந்து வரம் பெற்றுவர

தேங்காயுடைந்து என்ற வர்னமெட்டு

அன்னமேவிடைதாடி அருந்தவம்புரிந்துவாரேன்

மருத்வதி.

அடியாளுமுந்தன்பின்னு லேகுவேனேபிராணநாதா

மிருகண்டு.

வெம்பியழுகவேண்டாம் வேகமாயான்வாரேனடி

மருத்வதி

தம்பதியாய்சென்றுநாம் நம்பனையும்கண்டிடுவோம்

மிருகண்டு

வானவர்மெச்சும்படி வெந்தவம்புரிந்துவாரேன்

மருத்வதி

தானவர்மெச்சும்படி திரும்புவோமேவானவரே

மிருகண்டு வசனம்

கண்ணே! நீயும் வாரேனென்று பிடிவாதமாய் கூறுவதால் இருவரும் ஒரே மனதாய்,

ஷை வர்னமெட்டு

வெங்கடேசன்வணங்கும் சங்கரனடிதுதிப்போம்

மருத்வதி

மங்களமாய்வருவோம் மைந்தன்வரம்பெற்றுநாமும்

வசனம்:—சீக்கிரம் செல்லுவோம் வாருங்கள்.

(மறைதல்.)

காடுவழியா யேகுதல்.

ம்ருத்வதி வசனம்

நாதா! என்பாதங்கள் நோகுதே, ஆவிசோருதே. அங்கம்பதறுதே, களை மேலாகுதே இனி என்னால் நடக்கமுடியாது. இங்கு சற்று களையாறிச் செல்லுவோம்.

மிரு:—கண்ணே! உன் சித்தப்படி செய்குவோம்.

மரு:—நாதா! அடியாள் புத்திஹீனத்தைப் பார்த்தீர்களா! மானத்திலும் இக்காயம் பெரிதா? களையை இப்பொழுது நோக்கக் கூடுமா.

விருத்தம்

மதியில்லாவானம்போலும் மலரற்றபொய்கைபோலும்
இதிஹாசபுராணம்கற்றோ ரில்லாதஅவைபோலும்
சுதியில்லாகானம்போலும் சுதனற்றபாவியானேம்
அதிவிரைவாகசென்று அரனடிதொழுவோம்வாரீர்

வசனம்

சீக்கிரம் செல்லுவோம், வாருங்கள்.

(மறைதல்.)

5-வது சீன்.

காசிநகரைச்சேர்ந்த அடவி.

பாத்திரங்கள்:—மிருகண்டு, மருத்வதி.

மருத்வதி வசனம்

நாதா! இவ்வனம் யாருடையது? வெகு ரமணியமா யிருக்கிறதே.

மிரு:—என்னுசைக்கிசைந்த கனிரஸமே! இது காசி ராஜனுன விக்கிரமனுடையது, இவ்வனமே நம்தவத்திற்கேற்றது. ஆதலால் இவ்வனத்தில் தவம்செய்வோம்.

மரு:-பிராணேசா! இவ்வனத்திற்கு அவ்வளவு மஹிமையாதென்று அடியாளுக்குச் சற்று உரைக்கக்கூடாதா.

மிரு:—சொல்லுகிறேன், கேள்.

பொன்னிலவு என்ற வர்னமெட்டு

கண்ணிகள்

1 மாதவர்மகிழ்ந்துதவம் ஆதரவுடன்புரியும்
ஜோதிமயவனச்சோலை பாரடி அடி
மாதரசே இதுஎன்ன சீரடி இங்கு
பூதலம்புகழ் ஆதவனருள்
வாதனையன்றி சாதுக்கள்பெற்றார்
ஆதலாய்நமக்குமருள் வாரடி எந்தன்
காதலிஇதற்குநிகர் கூறடி மாத

2 பாரிஜாதமொடுமரு பாற்கமழும்வில்வதரு
பாங்காயோங்கி நிற்பதென்ன நேர்த்தியே இதில்
பாங்கியே தவம்செய்திடில் கீர்த்தியே சிங்
காரியே அலங் காரியேமனம்
தேரியீசனைக் கோரியே தவம்
பாரமாய்செய்தால்நம்மெண்ணம் பூர்த்தியேஆகும்
பாரியேபக்தரைக்கார்ப்பார் மூர்த்தியே மாத

2 வானவரும்தானவரும் வைய்யகத்திலுள்ளவரும்
வேணபேரிதில்விமலன் சேவையே கண்டார்
வேண்டியிங்குயானேகினேன் பூவையே சிவத்
யானம்செய்வோமிக் கானகத்தில்நாம்
மானிலம்மெச்ச ஆனதாலென்னெஸ்
கானமிசைகாதிற்கின்ப சுவையே பாடில்
நானிலத்தில்சேயடைவோம் பாவையே மாத

தவமியற்றல்.

அம்பாள்சரஸ்வதி என்ற வர்னமெட்டு.

கண்ணிகள்.

சம்போகெங்காதரா சந்திரஜடாதரா
சாம்பவனேநின்தாள் சேயன்நான்போற்றினேன்
உம்பர்வானவரும் துதிசெய்யும்நாதா
உந்தனருளடைய எப்போதும் ஏற்றினேன்

அம்பிகைபாகனே நம்பினேன்யோகனே
அடிமைக்கருளே காசிவிச்வேசனே
நம்பன்எம்பெருமான் நலமுடையோனே
துன்பமகற்றுவாய் கைலாயவாசனே

பரபிர்மசொரூபா பணிந்தேன்பிரதாபா
பவக்கடலொழிய தாருமோர்பாலனே
ஹரஹரசிவனே ஆலமுண்டவனே
வரம்தருவாயேழைக்கு பார்வதிலோலனே

ஐங்கரன்தந்தையே அன்னைபிதாகுரு
ஐய்யனும்நீயேயென் சங்கடம்தீர்ப்பாயே
வெங்கடேசன்சொல்லா வேண்டினேனித்தினம்
வைய்யம்யாவும்படைத்த சங்கராகார்ப்பாயே

ஈசன்பிராப்தம்.

சிவ:—வ-ம் மிருகண்டு! உன்கடுந்தவத்திற்கு மெச்சினேன் கண்ணை த்திறந்துபார் நின்வேண்டுகோள்யாது?

மிருகண்டு விருத்தம்.

திங்களை தரித்தாய்போற்றி திகழுமைபாகாபோற்றி
பொங்கரவணிந்தாய்போற்றி பொன்னொளித்ரேகாபோற்றி
கெங்கையை தரித்தாய்போற்றி காமனையெரித்தாய்போற்றி
செங்கையில்மழுமானேந்தும் சங்கராபோற்றிபோற்றி.

வசனம்

என்னையனே! அனாதரக்ஷகா! ஆபத்பாந்தவா! அருள்செய்ய வேண்டும்.

சிவ:—மிருகண்டு முனியே! இந்த வனத்தில் நீயும் உன்பத்தினியும் இப்படிப்பட்ட கடுந்தவம் செய்யவேண்டிய காரணம் யாது?

மிரு:—என்னாண்டவனே! சஙகரா! கெங்காதரா! சந்திரசேகரா! காசிவிசுவநாதா! ரிஷபவாகனாரூடராய் அம்பிகை சமேதராய் அடியார் துயர்தீர்க்க அன்புடன் ஆலகாலமுண்ட நீலகண்டா!

எங்கள் அந்திகாலத்தில் புத்தென்னும் நரகத்திலிருந்து யாங்கள் தப்பித்துக்கொள்ளவும் எங்கள் குலத்தை விர்த்திசெய்யவும் ஓர் சற்புத்திரனளிக்க வேண்டுமையா ஸ்வாமி!

சி:—மிருகண்டு முனியே! பூர்வஜென்மாந்திரங்களில் நீ ஓர்வில்வதளமாவது எடுத்து நம்மை பூஜித்தாயில்லை. இப்போது உன்மனேவியல்லலுக்காக கடுந்தவம்புரிந்தாய், உங்களுக்கு புத்திரனளித்தால் அவன் தீர்க்காயுஷ்மானுக புவியில் வாழமாட்டான் இதற்கென் செய்வது.

மிரு:—அடியேன் அறியாமல்செய்தகுற்றங்களை தேவரீர் பொருத்தருள வேண்டும் ஹே! பரமதயாநிதியே!பூதலத்திலுள்ளோர் புகழும் தங்கள் திருவடியை பூஜை செய்யும் மனதுடைய ஓர் பாலனை யளிக்கவேண்டும்.

சி:—மிருகண்டு! அசத்யனுகவும், அறிவற்றவனுகவும், தீயகுணங்களுள்ளவனும் 100-வயது வரை வாழ்பவனுமுள்ள ஓர் புத்திரன் வேண்டுமா; அல்லது கடுந்தபசியாகவும், சிறந்த பக்தனுகவும் 16-வயது வரை புவியில் வாழ்ந்து பிறகு என்னடியை சேர்பவனுகவுமுள்ள ஓர் சற்புத்திரன் வேண்டுமா.

மிரு:—சந்திர ஜடாதரா! கூன் குருடு, செவிடு, நொண்டி, சப்பாணி, பொய், களவு, சூது முதலிய இப்பேர்ப்பட்ட குணங்களையுடைய பிள்ளைகள் 100-இருந்தும் பிரயோஜனமென்ன? ஞானவானுகவும் பக்திமானுகவும் 16-வயதுள்ளவனுகவு மிருக்கிற ஓர் புத்திரனிருந்தால் போதும் சுவாமி.

சி:—அப்படியே தந்தேன். அப்புத்திரன் 16-வயதிற்குப் பிறகு நம்மிடம் வந்து சேருவான்.

(திரைவிழுதல்)

(ஈசன் மறைதல்.)

6-வது ஸீன்

வழி—சாலை.

மரு:—நாதா! ஈசன் என்னவரம் கொடுத்தார்.

மிரு:—16-வயதுள்ள ஓர்பக்திரஸபுத்திரனை யருள்செய்தார்.

மரு:—100-வயதுவரை வாழும்படியான ஓர் புத்திரனை என் கேட்கக்கூடாது.

மிரு:—பாவம் பண்ணக்கூடிய, 100-வயதுள்ள ஓர் புத்திரன் நமக்கென்ன சந்தோஷத்தை கொடுப்பான்? கவலைக்கு ஹேதுவே தவிர நன்மையில்லை.

மரு:—கானகத்திற்குச்சென்று கடும் தவமியற்றியும் அற்பாயுள்ள பாலனையா விரும்பவேண்டும்?

மிரு:—செவிடு ஊமை முதலானவைகளை யளிக்காமல் ஓர் சற்புத்திரனை தந்தாரே இதுபோதாதா. அதிக நேரமாய்விட்டது. ஆஸ்ரமத்திற்கு செல்லலாம் வா.

ஸீன் 6 - ஆஸ்ரமம்

(மார்க்கண்டனவதாரம் 10-வயதுமுடிந்து விட்டதென்று தாய்தந்தையர் புலம்பல் மரணகாலத்தைநினைத்து வருந்தல்.)

மருத்வதி வசனம்

ஹா, ஜெகதீசா! என்னசெய்யப்போகிறேன். புதல்வனையடைந்தும் பயனன்றி போனதே.

பஞ்சமாபாதகம் படாராதோ என்றவர்னமெட்டு.

கண்ணிகள்

ஐயைய்யோ தெய்வமே என்னசெய்வேன்யான்
வையம்தனிலினி ஏவ்வாறுய்வேன்
காலனுக்கோசேயை ஈன்றெடுத்தேன்—அந்த
ஆலகுண்டோனருளோ துயரடுத்தேன்
பாலன்லீலைகள்செய்து காண்கிலேனே—எந்தன்
சீலனுக்கென்கடமை செய்திலேனே
வார்த்தைதடுமாறுதே கைலைவாசா—கண்
பார்த்தருளவேணும் கௌரிநேசா

மார்க்கண்டன் பிராப்தம்.

மார்க்கண்டன் வசனம்.

என்னம்மா! சந்திரவதனம்போல் துலங்கும் தங்கள் திருமுக மிப்போது வாடியிருப்பதேன்? அடியேன் எவர்க்காகிலும் பிழைகளேதேனும் செய்தேனோ, தயவுசெய்து தெரிவிக்கவேண்டும்.

தாயையும்விட்டு தனித்திருந்தாய் என்றமெட்டு

கண்ணிகள்.

தந்தைதாயே நீங்கள் சிந்தைகலங்கியே
நொந்து அழுவதேன் அம்மா அம்மா
பாவம் நினைந்தேனோ பாதகம்செய்தேனோ
பாரில்யாரை வைதேனோ அம்மா அம்மா
சுந்தர மாமுகம் சோர்ந்து வாடினதேன்
மைந்தனிடம்கூறும் அம்மா அம்மா

வசனம்.

அடியேனை காணும்பொழுதெல்லாம் தங்கள் முகம் வாட்டமடைகிறதே. என் சொல்லுங்கள் அம்மா.

மரு:—என் அருந்தவப் புதல்வா! யானென்னவென்றுரைப்பேன் எவ்வாறு என்னாவெழும் தெய்வமே!

நாதன் வரவுங்காணேனே என்றமெட்டு

கண்ணிகள்.

ஐயய்யோ தலைவிதியோ அரன்சதியோ ஐ
வையகந்தனில்பெற்ற பாலனையிழந்திட்
தெய்வமேஎன்னசெய்வேன் எவ்வாறுஉய்வேன் தெ
மறலியைக்கண்டவுடன் மயங்கியழுவாயோடா
மாபாவியாகினேனே என்பாலகனே மா
காலனுன்னையதட்ட கண்ணாலேபார்ப்பேனோடா
ஞாலத்தோரேசலானேனே மோசம்போனேனே ஞா

நற்றவம் புரிந்துன்னை பெற்றும்பயன்போச்சே
சித்தம்துடித்திடலாச்சே பழிபேச்சே சி

மாதுபாகனளித்த ஆயுளும்முடிவாச்சே
ஏதுநான்செய்குவேண்டா ஸ்ரீ மார்க்கண்டா ஏ

வசனம்.

என்னென்ன நடக்குமோ தெய்வமே! ஒன்றுமறிகிலேனே.

மா:—தாயே! அடியேன் கேழ்விக்கு விடைபகராமல் என்னென்னமோ சொல்லி யழுகிறீர்களே யான் ஏதேனும் பிழை செய்தேனோ.

மரு:—ஒன்றுமில்லையப்பா உன்னைப் பெற்ற எனக்கும் ஓர்குறையுண்டாகுமா. ஆனால்,

பத்தினி கண்ணகியே என்றவர்னமெட்டு

கண்ணே என்கண்மணியே தேனேகற்கண்டேசர்க்கரையே
கோலமுடன்மணம்பால னுந்தனுக்குசெய்துயான்பார்த்திலேனே
பெற்றவயிறு இப்போ ஐய்யோபற்றிஎரியுதடா
நற்றவனேயுனக்குற்ற கடன்களைசற்றும்செய்திலேன்டா
பாலகனேஎன்செய்வேன் உன்னைகாலனுக்கோவளர்த்தேன்
ஆலகாலமுண்ட நீலகண்டனருளாலுதித்தசெல்வமே

வசனம்.

ஜெகதீசா! கைலவாசா! விஸ்வேசா! என்னசெய்வேன்! ஹா

(அழுகிறாள்)

மா:—தாயே என்னவிஷயம் ஒன்றும் விளங்கவில்லையே.

மிரு:—அப்பா மகனே மார்க்கண்டா! யானென்ன சொல்லுவேன், மனம்பதைக்குதே. நாவெழவில்லையே. பிறையணிபெருமான்ருளாலுதித்த.

நொண்டிச்சிந்து மெட்டு

கண்ணே என் கண்மணியே—மாணிக்கமே
சுட்டாணிமுத்தேபொன்னே—மரகதமே
விண்ணே என்மாமணியே—திகழ்
விமலனருளாலுற்ற—கோமேதகமே

திகட்டாமுக்கனியே—செங்கரும்பே
 தித்திக்கும்சீனிசர்க்கரை—செழுப்பாகே
மகனேஎன்னகம்நோகுதே—பாவி
 மாதின்கதைசேதியதைஓதிடக்கேளாய்
இந்திரனவைதனிலே—பாலகன்
 இல்லாப்பாவியென்றன்பிதா—தள்ளிடப்பட்டார்
சந்திரமுகமாதரிருவர்—பசியாயிங்கு
 சாந்தமுதுகேட்கானு—கந்தளித்திட்டேன்
பாலனில்லாபாவியென்றுணர்ந்து—என்னைப்
 பார்க்கொணுதென்றேசியன்னம்—ஏற்காமல்
சீலனைவேணித்தவம்செய்தே—னப்பா
 சிறுவனுனையருமையாகபெற்று—வளர்த்தேன்
முந்தினஜென்மத்திலே—நாங்கள்
 முக்கண்ணனைபூஜைசெய்ய—வில்லையதனுல்
உந்தனுக்காயுள்பதினூறு—தானென்றான்
 உரைத்தசொல்நினைத்தசும்—துடித்திட்டேனே
என்னநான்செய்வேனடா—யானும்
 ஏகமாகசோகமாகி—நோகலானேனே
சின்னம்சிறுவனடா—உனக்கு
 சிலநாள்தான்குவலயத்தில்—வாழ்வடா
விதியைவெல்லக்கூடுமோடா—மூவரும்
 விலக்கமனம்வைத்தாலுமியலு—மோடா
இதினல்துயர்அடைந்தேன்—பாவி
 இனிஎன்செய்வேனே—இந்தவனிதனிலே

மா:—அம்மா இதற்குத்தானுவருந்துகிறீர்கள், தேவரீர் பூஜைசெய்தபரமசிவன் எங்குசென்றுவிட்டார். அடியேனும் அவரை பூஜைசெய்து தீர்க்காயுள்பெற்றுவருகிறேன், அம்மணி! சஞ்சலப்படவேண்டாம்.

எல்லாம்துறந்தஎன்முன் என்றவர்ளமெட்டு

ராகம்-காப்பி- தாளம்-ஆதி.

கண்ணிகள்.

தாயேகலங்கவேண்டாம் தேவபூஜைசெய்துவாரேன்
சேயன்மகிழத்தானே ஆயுளைவிர்த்திசெய்வேன்

வாடாதே வாடாதே
தத்தளித்தாலென்னபயன் உத்தாரம்தாருமம்மா

மருத்வதி.

அந்தகனைநீகண்டால் நொந்துமயக்கம்கொள்வாய்
இந்தவிதஅவதி அடையவோவுருஎடுத்தாய்
பாலனே சீலனே
இல்லந்தனிலிருந்து வல்லவன்பூஜைசெய்வாய்

மார்க்கண்டேயர்.

பரமனருளினாலே பாதகமறலியைநான்
பதறிநடுங்கசெய்வேன் பயம்கொண்ட
மாதாவே மாதாவே
ஏனோதடைசெய்கிறாய் நானோடிவாரேனம்மா

மருத்வதி.

பாலனென்றும்பாராமல் காலன்கட்டவருவான்
சூலத்தால்குத்தவந்தால் சிதறிநடுங்காயோடா
என்மணி கண்மணி
கொஞ்சும்கிளிமொழிக்கே அஞ்சியழுவாயடா

மார்க்கண்டேயர்.

ஆண்டவனுள்ளவும் தீண்டவொட்டாமல்கார்ப்பேன்
தாண்டியென்னைகிட்டினால் மாண்டிடும்படிசெய்வேன்
அன்னையே என்னையே
ஆண்டவனுள்ளளவும் தீண்டவொட்டாமல்கார்ப்பேன்

மருத்வதி வசனம்.

அப்பாமகனே மார்க்கண்டா! எங்களுடைய அந்திகாலத்தில் எள்ளும் தண்ணீரு மிறைப்பா யென்றல்லவோ எண்ணி யிருந்தோம், காலன் உன்னுயிரை கவரவந்தால் நாங்கள் என்ன செய்வோம். ஹா,

சின்னவயதிலிந்த என்றமெட்டு.

கண்ணிகள்.

தெய்வமே வுனக்கிது ஞாயமா—இந்த
தேசத்தில் சேயீன்றதுமாயமா
வையகத்தில்யான் வகுத்தேன்ஜென்மமேன்
கையில்கிளி வளர்த்துதானே
காட்டுப்பூனைக் கிட்டதுபோலானேன்

வசனம்.

ஹாசா! முன்ஜென்மத்தில்யான் யாரைபழித்தேனோ எவருக்குள ன்னதீமைசெய்தேனோ பெரியோரைவைதேனோ யான்பெற்ற பிள்ளையை பிரியும்படியானகாலம் வந்திருக்கிறது.

ஷெமெட்டு

கண்ணிகள்.

ஈசாஇன்னமும் தயைவல்லையா—உனக்கு
ஈவிரக்கம் சற்றேனு மில்லையா
நேசமாயீன்ற ஆயுளுமாச்சே

வசனம்.

ஐய்யோ! அருந்தவத்தாலுற்ற நம் புத்திரனுக்கு ஓர்பெண்ணை மணம்புரிந்து கண்குளிரபார்க்கவேண்டு மென்று நான்,

ஷெமெட்டு

எண்ணினஎண்ணமெல்லாம் வீண்போச்சே
கண்ணீர்சொரிந்து வெம்பலாச்சே
சங்கராவுன்பொற்பாதம் தஞ்சமேஏழை
மங்கையென் மீதின்னமேன் வஞ்சமே
சேயாயுள் என்றும் ஈரெட்டு என்று
கெங்காதரரேமாது பாகனே
இங்கருளொண்ணு தோயோகனே

மார்க்கண்டன் வசனம்.

என்னருமைத்தாயே! ஏன் இப்படி புலம்புகிறீர்கள் நீதிசாஸ்த்திரத்தில் 'ருணனுபந்தரூபேண-பசுபத்னிஸுதாலயா,ருணக்ஷயம் யாந்தி-காதத்ரபரிவேதநா' என்றபடி எல்லாம் நீர்மேல்குமிழி போல்,கொஞ்சங்காலத்துக்கெல்லாம் மாறுபவைகளேயன்று அயன்ஸ்ருஷ்டித்தபோது எழுதிய எழுத்தை 'ஹரிணுபிஹரேணுபி பிர்ம்மணுபிஸுரைரபி-லலாடலிகிதாரேகா-பரிமாஷ்டும் நசக்த்யதே' என்று சாஸ்திரத்தினுல் அறிகிறோம், இப்படியிருக்கையில் நம்மால் விதியைவெல்லமுடியுமா? மேலும், 'அநித்யானி சரீராணி விபவோநைவசாஸ்வத, நித்யம்ஸந்நிஹிதோ மிர்த்யுகர்த்தவ்யம்' தர்மஸங்க்ரஹ' என்றபடி எப்போதாவது இறப்பென்பதுண்டு இகத்தில் ஜெனித்தவருக்கு மரணம்கட்டாயம் ஆறிலும் சாவு நூறிலும் சாவு, ஆதலால் இதைக்குறித்து வருந்துவதில் பலனில்லை, அம்மணி.

மரு:—என்னருமை பாலகா!

(கட்டிமுத்தமிடல்)

டாரோநாமே முகமத்-என்ற வர்னமெட்டு

ராகம்-பியாக்-தாளம்-ஏகம்

இந்தவிதம்நீயுகந்தால் நானென்செய்வேன்
என்னருமைமகனே செப்பாய்
என்னருமைமகனே இதுன்
ஸொந்தமொழிதானே விந்தையாய்பேசுருய்
அன்னைசொல் கேள்சுதனே அப்பா
அன்னைசொல் கேள்சுதனே போக
வேண்டாமடாபாலா ஏண்டாகுணசீலா
வாவாகண்ணே வருத்தாதேடா இ
ஒன்றுரைப்பேனதை நன்றென்றுணரென்
நற்றவற்றுற்ற சேயே அப்பா
நற்றவற்றுற்ற சேயே
இன்றகத்தில்பூஜை இதமுடன்செய்வாய்
ஈசன்வர மருள்வாரடா இ

வசனம்.

குழந்தாய் மார்க்கண்டா! ஓரிடத்திற்கும் தனிமையாக நீ செல்லக் கூடாது நமது மனையிலேயேபக்தியுடன் சிவபூஜைசெய்யலாம் என்மொழியைமீருதே.

என்னசெய்வேன் என்மகனே என்றவர்னமெட்டு.

ராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

கண்ணேயென்கண்ணின்மணியே இந்த—எண்ணமேன்நவமணியே
விண்ணவரீசனுறென்னை பாவி—பெண்ணுலகில் நானேயென்று
மா:—அம்மணியழுகவேண்டாம் சிவ—பெம்மானருள்நமக்குண்டு
இம்மனிதஜென்மமெல்லாம் சந்தை—ஏகக்கூட்டமென்றேயறி
மரு;—இப்படிநீசெப்பலாமா இது—தப்பிதமல்லவோபாலா
எப்படிதானென்னைவிட்டு ஏக—ஒப்பியேமனம் துணிந்தாய்

வசனம்.

என்னருமைபாலகா! யான்சொல்வதைகேள் பிடிவாதம் செய்யாதே சங்கராகங்காதரா என்றவர்னமெட்டு.

ராகம்-முகாரி-தாளம்-சாப்பு

பல்லவி.

ஐய்யையோவிதிவசமோ பாபிகள்கஷ்டம்
அடைவாரென்பதும்நிஜமோ

அநுபல்லவி.

தையல்புவியிலேங்க வைத்தாயோபிர்மதேவா
னையுதேமனம் வையத்திலென்ன
செய்வேனம்பலத் தைய்யனேயிது

சரணம்.

பற்பலகஷ்டப்பட்டேன் உன்னைபெருமல்
பரிஹாசவார்த்தைகேட்டேன்
கற்பகமேயிதுயார் கற்பனையோவறியேன்
காலமென்னமோ பாலகாவுந்தன்
வாலவயதிக் கோலமாகவும் ஐ

மருத்வதி வசனம்.

என்னருமை பாலகா! வீணே என்மனதை புண்படுத்தாதே நான் சொல்வதை கேள்,

மா:—அம்மா! அழுவதால் என்னபிரயோஜனம் தங்களுக்கு தெரியாததா நான் சொல்லப்போகிறேன். ஆகையால் அடியேன்,

பூவிருந்திருவே என்ற-வர்னமெட்டு.

ராகம்-வராளி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சென்று வருவேனம்மா சிவனைக்
கண்டுவருவேனம்மா எந்தன்

சிரஸினிலயன் குறித்தபடியே
வரிசையாயுறு மறிவாயாதலால்

மருத்வதியம்மா நீயும்
வருந்தாதேசும்மா அந்த

மாசில்லாத ஈசனடியை
பூஜைபுரிந்து ஆசிபெறவே செ

(மறைதல்)

(மருத்வதி கரத்தைப்பற்றி இழுக்கிருள்)

ராகம்-தன்யாசி-தாளம்-ஆதி

கண்ணிகள்

வாடாஎன் கண்ணின்மணியே வந்தொருமுத்தம்
தாடாவென் நவமணியே வா

ஏடாவுனக்கின்றிது கூடாதாடாமகனே
பாடாயான் பட்டதெல்லாம் ஓடாதே என்னருகில் வா

பிறவிகுருடனுக்கு இறவிதனைக்காட்டி
பிறகதனைமாய்த்த சிறுகதைக்கிலக்காணேன் வா

புத்தெனும்நரகத்தில் படுகின்றபாடெல்லாம்
தத்தளிக்குமென்மனப் பாட்டிற்கீடாகுமோ வா

மார்க்கண்டன் வசனம்.

தாயே! எல்லாமறிந்த தங்களுக்கும் அடியேன் புத்தி கூற வேண்டுமோ? சொல்லும்போது தடுக்கலாமா! நேரமாய்விட்டது போய்வருகிறேன்.

மருத்வதி விருத்தம்-முகாரி

ஐய்யஹோ அருமைபாலா அருந்தவம்செய்துபெற்றேன்
தையலாள் தாரணியில்தயங்கியேவாடலுற்றேன்
நைய்யுதேனுள்ளமப்பா நான்சுகம்தானுமற்றேன்
மெய்யதுசோருதே என்மொழியினைமீறலாமா.

மார்க்கண்டன் தரு.

ராகம்-சாமா-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

தாய்தந்தையேமனம் வாடவேண்டாம்
உங்கள்சேயைக்காலனெருக்காலும்தீண்டான்
விதியைவெல்வேனே மதியினால்நானே
விமலனாருளினால்தானே

ஷை கண்ணிகள்

மருத்வதி.

சங்கரனருள்பெற்ற கண்மணியே
உன்சொல் சாக்காககாணு தடாமகனே
பெற்றமனம்பித்து பிள்ளைமனம்கல்லு
என்றமொழி பிசகாசுதனே

மார்க்கண்டன் வசனம்

தாயே! இந்த அண்டபிண்ட சராசரங்களுக்கெல்லாம் ஆதிபராபர வஸ்துவாகிய பார்வதி பரமேசுரருடைய பாதார விந்தங்களை பூஜைசெய்து அன்னவர்சேவை கண்டு ஆசிர்வாதம் பெற்று வருகிறேன் அம்மணி.

சந்தோஷமாக விடை தரவேண்டும்.

மருத்வதிவசனம்.

கண்மணி! பரமன் உனக்களித்ததோ 16-வயது அப்பொழுது யான் உன்னை எப்படி பாதுகாத்தபோதிலும் பிரியநேரிடும் இளங் கன்று பயமறியாது என்ற ஆன்றோர்வாக்கியப்படி இப்பொழுதே என்னைவிட்டு பிரிகிறேன் என்கின்றனையே. இது நியாயமாமா? (மூத்தோர்சொல் வார்த்தையமிர்தம்) என்பதை நீயறியாயா. ஆதலால் நாங்கள் சொல்வதை கேட்பாய் உன் தந்தை உன்னைப்பிரிய மனமில்லாமல் வருந்துகிறுரே, பாலா! நான் என்ன செய்வேன்.

ஐயோஎன் ஜானகியை என்ற-வர்னமெட்டு.

ராகம்-முகாரி-தாளம்-சாப்பு.

ஆமகனே மார்க்கண்டா
அப்பாபாலா மார்க்கண்டா
ஆசையுன்னைப் பிரிவேனோ மகனே ம-ம-ம
செய்யாத் தவங்கள்செய்தும்
சிவனை நினைந்துந்தும்
சித்தம் கலங்கலானேம் மகனே ம-ம-ம
என்னபாவம் செய்தேனோ
எவரையேசி வைதேனோ
சொன்னசொல் தவறிட்டேனோ மகனே ம-ம-ம

மார்க்கண்டேயன் தரு.

பக்ஷமிருக்கவேணும் என்ற-வர்னமெட்டு.

கண்ணிகள்.

எந்தனருமைத்தாயே கலங்காதே நீயும்
சிந்தைநொந்து மனமேங்காதே
மந்தஹாசமா மதியணிஸோம
ஸுந்தரன்பூஜைசெய்து வருவேனே நீயு
கந்தனுப்பில் சுகம்பெறுவேனே

மருத்வதி தரு.

ஷை மெட்டு.

கண்ணிகள்.

மைந்தனுயுன்னைப்பெற்றேன் பாலகனே யானும்
எந்தவிதம்பிரிவேன் மார்க்கண்டனே
அந்தோ என்னுவி அலையுதேமேவி
சொந்தகத்தில் பூஜித்துக்களிப்பாயே

மார்க்கண்டன் தரு.

ஷை மெட்டு.

கண்ணிகள்.

தாயே துடித்து துயிராடாதே திகழ்
தெய்வமெந்தனைக் கார்க்கும்வாடாதே
தடைசெய்வதேது விடைதாயிப்போது
தயங்கினுலென்பயன் என்னம்மா அன்று
அயனமைத்தபொறி வீண்போமா

மருத்வதி தரு.

ஷைமெட்டு

கண்ணிகள்.

பக்தியே சக்தியென்னும் கெண்ணியனே தயை
வைத்திடு அன்னைமேல் புண்ணியனே
இத்தினம் சென்ருல் இடுக்கண் ணுறுமே
உத்தமா வுன்னைப்பிரிந்திரிக்கேனே இதை
பற்றிபகர்ந்தா லுயிர்தரிக்கேனே பக்தி

வசனம்.

என் கண்ணே! பெற்றநாள் முதல் உன்னைப் பிரிந்தறியேனே நீ என்னை தனிமையாக விட்டுச்சென்ருல் யான் எவ்வாறு சகிப்பேன்.

மா:— வ-ம்:— தாயே! தாங்கள் ஒன்றுக்கு மஞ்சவேண்டாம் ஈசன்துணை எனக்குண்டு ஆதலால் போய்வருகிறேன்.

(மறைதல்)

மருத்வதி வசனம்.

ஹா பாலகா! (கீழேவிழுந்துபுரண்டு சோகமாய்)ஐயோ தெய்வமே! எங்கே காணுமே! சென்றுவிட்டானு! ஹா! என்னசெய்யப் போகிறேன் ஜெகதீசா! ஆபத்பாந்தவா! அநாதரக்ஷகா! உன்னையே நம்பினேன் மைந்தனைக் கார்ப்பது உன்கடமை, ஐயோ பாலகா! சேயற்ற பாவியென்று வையத்தோரும் முனிவர்களும் தேவர்களுமென்னையேச யான் கணவன் சகிதம் கானகம் சென்று அருந்தவம்புரிந்து பரமனருளினுலுன்னைப் பெற்றெடுத்து வளர்த்து பாலூட்டி சீராட்டின,

கண்மணியே பெண்மணியே என்ற-வர்னமெட்டு

ராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கோதையானும்குமாரனே கைவிடவிதிவசமோ
கோகிலமேபாலகனே கோலமணக்காலமிதே
சுந்திரனேயந்தரமா யென்னைவிட்டுச்சென்ருயோடா
சிந்தைநொந்துநிந்தனைக்கு எந்தநேரமுமாயினேன்
தெள்ளமுதுபிள்ளைபெற்று கொள்ளிவைக்கமுன்னிழக்க
தருமமாமாதேசிகனே தேவாயிதுவுநின்னருளோ
நற்றவற்றூலுற்றபாலா சற்றும்மொழிகேட்டடியேன்
நங்கையானே ஏங்குறேனே இங்குஅகம் தத்தளித்து

(திரைவிழல்)

8-வது சீன்

கானகம்.

மார்க்கண்டன் வசனம்,

ஹா தெய்வமே!; நின்திருவடியை தெரிசிக்க இச்சிறுவனுக்கு ஓர் வழிகாட்டக்கூடாதா.

(நாரதர் பிராப்தம்.)

மார்க்கண்டன் தரு.

அமரனபி என்ற வர்ன-மெட்டு.

பல்லவி.

மாதவமேபணிந்தேனுன் பொற்பாதமே

அநுபல்லவி.

மாதவாநானே ஆதாவுடனே
பாதமேகெதியென நிதமும்வேண்டினேன் மா

நா-வ-ம்:— தீர்காயுஷ்மான் பவ!

மா:—என்னையனே! தங்களை சாக்ஷாத் கைலாஸபுரி நிவாஸர்தான் இங்கு கொண்டுவந்துவிட்டார்போலும், என் ஆண்டவனே! மறுபடியும் தங்கள் பாதாரவிந்தங்களைப்போற்றி நமஸ்கரிக்கிறேன்.

(நமஸ்கரித்தல்)

நா:—தீர்க்காயுஷ்மான் பவ!

மார்க்கண்டா! ஏன் இப்படி சொல்லுகின்றனை.

(ஞானதிருஷ்டியால் உணர்தல்)

ஓஹோஹோ! மோசம் போயினமே! ஏமாறிவிட்டோமே! இருந்தாலும்,

மார்க்கண்டா, பயப்படாதே! எண்டிசையையும் படைத்த அன்னவாகன ரூடராகிய அயனைக் குறித்துத் தவம் செய்தால் அவர் உனக்குக் காக்ஷிதந்து ஈசுவரன் அருள் அடையும் வகையை போதிப்பார் ஆகையால் என்னப்பனைக் குறித்துத் தவம்செய்வாய் நேரமாய்விட்டது நான் செல்லுகிறேன்,

(மறைதல்)

மா:—தங்கள் உபதேச மொழிப்படியே நான்முகனைவேண்டி தவம் செய்கிறேன் (தனக்குள் நாரத மஹாமுனிவர் சொல் நமக்கு நன்மையை விளைவிக்கக்கூடியதாய் தோற்றுகிறது ஆதலால் இப்பொழுதே தவம்செய்கிறேன்,)

(தவமியற்றல)

(பிர்மதேவர் பிராப்தம்)

மார்க்கண்டன் வசனம்

என்னையனே! நமஸ்கரிக்கின்றேன்.

பி:— தீர்க்காயுஷ்மான் பவ! மார்க்கண்டா! இக்கடும் தபம் செய்யுங் காரணம் யாது?

மா:—என்னாண்டவனே! அரிச்சந்திரன், தர்மபுத்திராதிகள் வாக்கு பொய்யானாலும் ஆகும். அக்னிகுளிர்ந்தாலும் குளிரும், அலை கடல் வற்றினாலும் வற்றும், சந்திரன் சூரியன் திசைதவறி யுதித்தாலும் உதிக்கும், தங்கள்வாக்கு ஒருநாளும் பொய்யாகாது. ஆதலால் என்னையயனே! என்னுயுள் முடிவதற்கு இன்னும் கொஞ்சம்காலம் தான் இருக்கிறது என்பதை தாங்கள் அறியாததன்று, அப்போது காலன்வந்து என்னைக்கட்டியிழுத்து தன்பட்டணத்திற்கு கொண்டு சேர்ப்பான் இப்படி நேர்ந்தால தங்கள்மொழி எப்படி நிஜமாகும், ஆதலால் அக்காலனிடத்திலிருந்து அடியேன் தப்பித்துக்கொள்ளும் வழியை அறிவிக்கவேண்டும். சுவாமி?

பி:—ஹே! மார்க்கண்டா! இக்காரியம் என்னாலாகாது ஆக்கல், காத்தல் அழித்தல் முதலிய தொழில்களுக்கு மூலாதாரமாயும், பஞ்சாக்ஷரங்களால் சூழப்பட்டவராயும், வேதங்களுக்கெல்லாம் மூலகாரணமாயுள்ளவரான ஆத்தி மரத்தின்கீழ் வீற்றிருக்கும் ஆலகாலமுண்ட நீலகண்டனை ஒரே மன [illegible] பக்தியோடும் சிரத்தையோடும் பூஜைசெய்பவர்கள் [illegible] அருளுக்கு பாத்திர மாவார்கள். [illegible] வீசனை அனுதினமும் தவறாமல் [illegible] வருவாய்.

மா:— உலகம்பாவையும் படைத்த உத்தமரே! பரமசிவனுடைய பாதாரவிந்தங்களை எவ்வாறு பூஜிப்பது என்கிற விதிகளை தயவுசெய்து அடியேனுக்கு புகலவேண்டும்.

பி:—மார்க்கண்டா! மறுஜெனன மெடுக்காமலிருக்க விரும்புகிறவர்கள் ஸாக்ஷாத் பரமேஸ்வரனுடைய பஞ்சாக்ஷரத்தை விடாமல் பக்தியுடன் ஜெபிக்கவேண்டும், அவர்கள் சகல பாபங்களிலிருந்தும் விடப்படுவார்கள் ஈசுவரன் அவர்களுக்கு மனமகிழ்ந்து காக்ஷிதருவார். அவர்களிடம் காலன் ஒருக்காலும் அணுகான். அப்படி யணுகினலும் ஈசன் அக்கூற்றுவனை உதைத்துத தள்ளிவிடுவார். ஆகையினல் இதோ அம்மந்திரத்தை உனக்கு போதிக்கிறேன்.

(போதித்தல்)

இம்மந்திரத்தை விடாமல் ஜெபித்து ஈசன் அருள் அடைவாய், தவிரவும் ஒவ்வொரு நாளும் பிராதகாலத்தில் மூழ்கி துல்யமான விபூதி ருத்ராக்ஷங்களை யணிந்து வில்வமெடுத்து ஈசுவரனை பூஜித்து வந்தாலும் அவர் காக்ஷி ஈவார், ஆகையினல் நீ என் உபதேசப்படி செய்து வருவாய்,

(மறைதல்.)

மா:—தங்கள்மொழிப்படியே நடக்கிறேன் (தனக்குள்) ரொம்ப சந்தோஷமாயிற்று நடுசமுத்ரத்தில் திசைதெரியாமல் தத்தளித்துக் கொண்டிருக்கும் கப்பலுக்கு ஓர் துறை கிட்டியதுபோல் ஒன்றும் அறியாமல் தத்தளிக்கும் எனக்கு ஓர் வழியை நான்முகன் எடுத்துக்காட்டிவிட்டார், இனி எனக்கு காலன் பயத்தை ஒழிக்கும்படியாய் ஈசன் பிராப்தமாவார் என்பதில் சந்தேகமேயில்லை, ஆதலால் யான் கெங்கையில் முழ்கி பிறகு சிவபூஜை செய்யப்போகிறேன்.

(மறைதல்)

மார்க்கண்டேயர் சரித்திரம் டிராமா

நல்பாகம் முற்றிற்று.

புதிதாய் அச்சிடும்

நூதன புத்தகங்கள்

நல்லதங்காள் சரித்திரம் (நாடகத்திற்குரியது)	0	3	0
கோவிலன் சரித்திரம் முதற்பாகம்	0	3	0
ஷை இரண்டாம்பாகம்	0	3	0
அல்லி அர்ஜுனு சரித்திரம்	0	3	0
புதிய பார்சி சதாரம் சரித்திரம்	0	3	0
சுலோசனு சரித்திரம் (ராமாயணத்தில் இந்திரஜித்துவதம்	0	2	0
பார்ஸீ நூதன சிராளன் சரித்திரம் 1-ப்பாகம் 0-3-0 2-ம்பாக	0	3	0
தேவரகசியமென்னும் ,காரர்சசாங்கவிஜயம்	0	3	0
புஷ்பலீலாவதி என்னும் குலோபகாவலிசரித்திரம்	0	3	0
பார்ஸீ லலிதாங்கி சரித்திரம்	0	3	0
வைகுந்தவாசன், கைலாசநாதர், முருகக்கடவுள் பஜனை கீர்த்தனை, இதில் இந்துஸ்தான பார்ஸீ, தில்லானு,டோமரி திருப்புகழ், காவடிச்சிந்து, தேவாரம் முதலானவர்ண மெட்டுகளாலியற்றியது.	0	6	0
கபீர்தாசர்சரித்திரம் திருப்புகழ்காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	4	0
மஹா பக்தவிஜயத்தில் ஓர்பாகம் மதிவல்லபமங்கை நமோஹனுள் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	3	0
ஜயதேவர்சரித்திரம் திருப்புகழ்காவடிச்சிந்து வர்ணமெட்டு மஹாபக்தவிஜயத்தில் ஓர்பாகம்	0	2	0
தாஷ்பக்தன் கும்மி	0	2	0
ஸ்ரீமகாவிஷ்ணு தசாவதாரகீர்த்தனைகள் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ணமெட்டு	0	2	0
அகல்யா சாபவிமோசனம் திருப்புகழ் காவடிச்சிந்து வர்ண	0	4	0
திருப்பதிவெங்கடேசுவரர் தேர்வண்டிக்கால்கீர்த்தனை	0	8	0
ஸ்ரீவேணுகோபாலநாமசங்கீர்த்தனம்	0	6	0
அம்பரீஷ சரித்திரக் கீர்த்தனை 0-2-0 சீதாகல்யாணம்	0	2	0
துருவ சரித்திரக் ,,	0	3	0
சுபத்திரைகலியாணக் ,,	0	2	0
உருக்மாங்கத சரித்திரக் ,,	0	2	0
சிறுத்தொண்டநாயனர் சரித்திரக்கீர்த்தனையும் சீலவதி சரித்திரக் ,,	0	2	0
ராஜலக்கிரீடை	0	2	0

சோதிட புத்தகங்கள்.

சாதகசிந்தாமணி (திக்குகடிதம் அட்டைபயிண்டு)	1	8
ஷை (திக்குகடிதம் கலிகாபயிண்டு)	2	0
ஷை (கிளேஸ்கடிதம் கலிகாபயிண்டு)	2	8
சோதிட கிரகசிந்தாமணி என்னும் பெரியவருஷாதிநூல்		
திக்குகடிதம் (அட்டைபயிண்டு)	0	12
ஷை (திக்குகடிதம்-கலிகாபயிண்டு)	1	0
வினாடி பஞ்சபக்ஷிசாஸ்திரம் (மூலமும்-உரையும்)	1	4
கமலமாமுனி ரேகைசாஸ்திரம் (மூலமும்-உரையும்)	1	0
போகர் பஞ்சபக்ஷிசாஸ்திரம் (மூலமும்-உரையும்)	0	14
அகஸ்தியர் பஞ்சபக்ஷிசாஸ்திரம் (மூலமும்-உரையும்)	0	12
சாதகாலங்காரம் (மூலம்)	0	12
பெரிய சில்ப சாஸ்திரக் களஞ்சியம் சில்பசாஸ்திர (திக்கு கடிதம் கலிகாபயிண்டு)	2	0

வைத்திய புஸ்தகங்கள்.

உரோமரிஷிகாயனார் வைத்தியம் 500	0	10
போகமுனிவர் வயித்தியம் 700	0	10
போகமுனிவர் ஜெனனசாகரம்	0	12
அகஸ்தியர் வயித்தியகாவியம் 1500	1	0

விளம்பரம்.

வித்தியாப்பியாசிகளுக்கு தெரிவிப்பது யாதெனில்:—

எமது புத்தகசாலையில் அநேகவித சரித்திரங்கள், திருப்புகழ், சவடிச்சிந்து வர்ணமெட்டுகளில் எழுதி அச்சிட்டிருக்கிறோம். தேவையானவர்கள் அடியிற்கண்ட விலாசதாருக்கு எழுதி பெற்றுக்கொள்ளலாம்.

புத்தகங்கள் தேவையானவர்கள் வேண்டிய புத்தகங்களின் விலைக்குத் தகுந்த போஸ்டுபில்லைகள் வாங்கி சவர் [illegible] வைத்து அனுப்பினால் உடனே நீர்கோரிய புத்தகத்தை அனுப்புவோம். தபால் பில்லைகள் அனுப்பாமல் அனுப்பச்சொல்லி எழுதினால் நாங்கள் அனுப்ப வி-பி-சார்ஜ் 1-புத்தகத்திற்கு 5-அணா வாகும். அதனால் மேற்சொன்னபடி தபால்பில்லைகள் அனுப்பினால் நாங்கள் கட்டெபெட் போஸ்டாக அனுப்புவோம். நீங்கள் அவ்விடத்தில் 1-அணா குடுத்து வாங்கிக் கொள்ளவும். அப்படி அனுப்பினால் புத்தகம் உங்களுக்கு பத்திரமாக சேரும்.

வேண்டியவர்கள் உங்கள் விலாசத்தை விவரமாய் எழுதவும்.

இப்படிக்கு,

பெ. ஆறுமுக முதலியார்,

நெ 4, 2-வது சந்து, பெருமாள் கோவில் தோட்டம், மதராஸ்.